இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல்

ஆண்டறிக்கை **-2024**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0004 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2020 செப்டம்பர் |
| அறிக்கையிடல் காலம் | 2024 ஜனவரி - 2024 டிசம்பர் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | சரவணன் நடராசா, மயூரநாதன் இரத்தினவேல், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| அறிக்கையிடல் காலத்திற்குரிய செயற்றிட்டச் செலவு | LKR 263,951.20 |

செயற்றிட்ட அறிமுகம்

நூலக நிறுவனம் 1900 இற்கு முன் இலங்கையில் வெளிவந்த தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஆக்கங்களைப் பட்டியலிட்டு, பாதுகாத்து, அணுக்கப்படுத்துவதை முன்னெடுப்பதற்காக இலங்கை தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல்" செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகிறது. அண்மைக் காலமாக இலங்கை தமிழ் சமூகம் சார்ந்து வெளியிடப்பட்ட பல படைப்புகள் பற்றிய தகவல்கள் archive.org, hathitrust.org போன்ற வலைத்தளங்கள் ஊடாக பொதுவில் கிடைக்கத் தொடங்கியுள்ளன. மேலும், நூலக நிறுவனம் பங்கெடுத்த "யாழ்ப்பாண புரட்டஸ்தாந்து டிஜிட்டல் நூலகம்" (jaffnapdl.org) ஓர் ஊக்கியாக அமைந்தது. ஆகவே இவற்றை மையமாகக் கொண்டு, இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இலக்கு

- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பில் தற்போது கிடைக்கும் படைப்புக்கள் மற்றும் கிடைப்பதற்கு அரிதான தமிழ் படைப்புக்களை தேடி ஆவணப்படுத்தி இலவச அணுக்கத்திற்கு வழங்குதல்.
- 1900 களுக்கு முற்பட்ட ஆவணங்களை சேகரித்து மின்வருடியோ அல்லது மென்கோப்பு வடிவிலோ நூலக வலைத்தளத்தில் இணைத்தல்.

நோக்கம்

- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பில் தற்போது கிடைக்கும் படைப்புக்களும், கிடைப்பதற்கு அரிதான படைப்புக்களையும் ஆவணப்படுத்தல்
- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான விடயங்களை முழுதாகவோ, பகுதியாகவோ கொண்ட ஆவணங்களை ஆவணப்படுத்தல்
- இலங்கைத் தமிழ் பேசும் சமூக உறுப்பினர் மற்றும் இலங்கை தமிழ் பேசும் சமூக உறுப்பினர் அல்லாதோரால் ஆக்கப்பட்ட ஆவணங்களை ஆவணப்படுத்தல்.
- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் பயன்பாட்டுக்காக மற்றும் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் பற்றிப் பிறரின் பயன்பாட்டுக்காக ஆக்கப்பட்ட ஆவணங்களை ஆவணப்படுத்தல்.

செயற்றிட்ட அடைவுகள்

- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட முன்னோர் ஆவணக செயற்றிட்டமானது 2023 ஆம் ஆண்டு வரை 634 நூல்கள், 709 இதழ்கள் மற்றும் பத்திரிக்கைகள் , 113 பிரசுரங்கள் , 1049 அறிக்கைகளை ஆவணப்படுத்தி முன்னோர் ஆவணக செயற்றிட்டத்தின் கீழ் அனைவருக்குமான இலவச அணுக்கத்திற்கு வழங்கியுள்ளது.

**2024** ஆம் ஆண்டின் அடைவுகள்

| இல | ஆவண வகை | அடைவுகள் |
|---|---|---|
| 1 | நூல்கள் | 07 |
| 2 | பத்திரிகைகளும் இதழ்களும் | 158 |
| 4 | அறிக்கைகள் | 1424 |

- 2024 ஆம் ஆண்டில் 1899 ஆண்டிற்குரிய Supplement To The Ceylon Government Gazette எனும் 231 அறிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வறிக்கைகள் வெளியிடப்பட்ட ஆண்டுகளுக்குரிய 13 ஆம் தேதியிட்ட அட்டவணை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 11 (c) இன் படி சான்றளிக்கப்பட்ட வாக்காளர் பதிவேடுகளின் திருத்தங்களை பொதுப்பார்வைக்கு அளிக்கும் நோக்கத்தில் வெளியிடப்பட்டவை ஆகும்.

[Supplement To The Ceylon Government Gazette]

- Ceylon Government Gazette எனும் அறிக்கையின் 1889 முதல் 1900 ஆம் ஆண்டு வரையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட 1738 பகுதிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வறிக்கையான கவர்னரினால் பணியமர்த்தப்பட்டோர் விபரம் ,இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் விற்பனைக்கு வரும் காணிகளின் விபரம் , அறிக்கை வெளியிடப்பட்ட காலகட்டத்தில் இடம்பெற்ற போக்குவரத்து சுருக்கம் , ரயில்கள் மூலம் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட பொருட்கள் விபரம் எனபவை குறித்தும் Tender களுக்கான அழைப்பு அறிவிப்பு, நிதி விற்பனை அழைப்பு விபரங்கள் குறித்த விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையாக காணப்படுகிறது.

[Ceylon Government Gazette]

- உதய தாரகை (Morning star ) இலங்கையில் வெளியிடப்பட்ட மிகப்பழைய பத்திரிகைகளில் ஒன்றாகும். இப்பத்திரிகையின் பதிப்புக்களில் 62 பதிப்புகள் இச்செயற்றிட்டத்தின் கீழ் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

[உதய தாரகை]

- The Ceylon Times இலங்கையில் வெளிவந்த தினசரி ஆங்கிலப்பத்திரிகை ஆகும். இப்பத்திரிகையின் 104 பதிப்புக்கள் இவ்வருடம் இச்செயற்றிட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. ஆரம்பகாலங்களில் ஏலம் மூலம் விற்பனை , விநியோக அறிவிப்பு , நிதி துறை அறிவிப்பு ஆகிய விடயங்கள் உள்ளடங்களாக வெளியிடப்பட்டது.

[The Ceylon Times]

## எதிர்கொண்ட சவால்கள்

.

- 1900 இற்கு முற்பட்டு வெளிவந்த தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்ந்த பிறமொழி ஆவணங்களில் இலங்கை பற்றிய குறிப்புகள் காணப்படும் போதும் குறிப்பிட்ட மொழிகள் தொடர்பான விளக்கமின்மையால் அவற்றை ஆவணப்படுத்தல் கடினமாக உள்ளது.
- பெறப்படும் ஆவணங்களில் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரமே ஆவணப்படுத்தக் கூடியதாக இருந்தது.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- இச்செயற்றிட்டத்திற்கான கள ஆய்வாளரொருவரை செயற்றிட்டத்தினை வெற்றிகரமாக மேற்கொள்ளத் தேவையான பயிற்சிகளை கள ஆய்வினை மேற்கொள்ளல்.
- நூலகங்களுக்கிடையே மிக வலுவான தொடர்புகளை ஏற்படுத்தல். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள நூலகங்களிடையே வலுவான தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமாக 1900 இற்கு முன்னைய ஆவணங்கள் தொடர்பான விபரங்களை பெற முடியும்.
- ஏனைய செயற்றிட்ட கள ஆய்வாளர்களின் உதவியுடன் ஆவணங்களை சேகரித்தல்.
- ஏனைய நாடுகளில் இலங்கை தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட ஆவணங்களையும் ஆவணப்படுத்தல்.

## முடிவுரை

முன்னோர் ஆவணக செயற்றிட்டமானது இலங்கை தொடர்பான 1900 இற்கு முற்பட்டு பிரசுரிக்கப்பட்ட அனைத்து வகையான ஆவணங்களையும் ஆவணப்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டது. அந்த வகையில் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 581 நூல்கள், 1103 பத்திரிகைகளும் இதழ்களும், 143 பிரசுரங்கள், 2267 அறிக்கைகள் என 4094 ஆவணங்கள் மொத்தமாக எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன.

## பின்னிணைப்பு

இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல்